# பிறருக்கு உதவுவோம்

கமலன் நல்ல சிறுவன். அவன் பாடசாலைக்கு நடந்தே செல்வான்.
ஒரு நாள் வீதியில் ''**வெள்ளைப் பிரம்பு**'' வைத்திருந்த ஒரு பெரியவரைக் கண்டான். அவர் புகையிரத வீதியில் நின்று தடுமாறினார். கமலன், அவர் பார்வை இழந்தவர் என்பதைக் கண்டு கொண்டான். அப்போது புகையிரதம் ஒன்று வேகமாக வந்தது. கமலன் விரைவாக ஓடினான். பெரியவரின் கையைப் பிடித்திழுத்துக் காப்பாற்றினான்.



அவன் அப்படிச் செய்யாவிட்டால் புகையிரதம் பெரியவரை மோதியிருக்கும். இச்சம்பவத்தன்று கமலன் தாமதமாகவே பாடசாலைக்குப் போனான். ஆசிரியர் காரணம் கேட்டார்.



கமலன் நடந்தவற்றைச் சொன்னான். ஆசிரியர் அவனைப் பாராட்டினார். கமலனைப் போல மற்றவர்களுக்கு உதவுவது நல்ல பழக்கம் என்று மாணவர்களுக்குக் கூறினார்.

பிள்ளைகளே! நீங்களும் கமலனைப் போன்று மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

குறிப்பு: ★ பிறருக்கு உதவும் மனப்பாங்கு வளர மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.
★ வினாக்கள் கேட்டு மாணவர் விடை கூற வழிப்படுத்துங்கள்.